1989 மே 11] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 6-20)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப் பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு

*(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) மற்றும் ஆளுநர் அவர்கள் அச்சட்ட முன்வடிவு குறித்து அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு மற்றும் ஆளுநர் அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) திரும்பப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திரும்பப்பெறப்பெற்றது.

(ஔ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 4 அல்லது 5 சட்ட முன்வடிவுகள் பொது விற்பனை வரி துறையைப் பொறுத்து இருக்கின்றன. எனவே அவைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிந்த பிறகு விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

---

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

** 6—5—89 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.